இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 12 | திகதி : 17.07.2022 | விலை : 50.00

# தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்க்கமான முடிவெடுக்க வாருங்கள்!

## மதத்தலைவர்கள் கூட்டாக வலியுறுத்து



தற்போதைய நெருக்கடி நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வினை முன் வைப்பதற்கு அனைத்து நாடாளு மன்றப் பிரதிநிதிகளும் ஒன்று கூடித் தீர்க்கமான முடிவெடுக்க வாருங்கள் என மதத்தலை வர்கள் கூட்டாக வலியுறுத்தியுள் ளனர்.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெற்ற விசேட ஊடகச் சந்திப்பிலேயே சமயத்தலைவர்கள் கூட்டாக வலியுறுத் தியுள்ளனர்.

*இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.*

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானம் மேற்கொள்ள வேண்டிய தருணம் சகல தமிழ்க் கட்சிகளும், குறிப்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் விரைவில் ஒன்று கூடி இன்றைய இலங்கை அரசியல் சூழலில் எடுக்க வேண்டிய தீர்மானம் என்ன என்பதை சீராகத் தீர்மானிப்பதற்கு முன் வரவேண்டும்.

வடக்கு - கிழக்கு,மலையகம்,தெற்கு என்ற பேதமின்றி தமிழ் நாடாளுமன்ற அங்கத்தவர்கள், கட்சித் தலைவர்கள் வேறுபாடுகளைக் கடந்து மக்களுக்காக ஒன்று கூடவேண்டிய தருணம் இது. எனவே அறிவு பூர்வமாகத் தீர்க்க தரிசனத்தோடு ஒன்றுகூடி ஆராயுங்கள்.இது காலத்தின் கட்டாயம்.இவ்வேளை நீங்கள் ஒன்றுகூடி ஆராய மறுப் பீர்கள் ஆனால் அது மாபெரும் வரலாற்றுத் தவறாகும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த ஊடகச் சந்திப்பில் நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், ரிஷி தொண்டுநாத சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய ஜனாதிபதி மற்றும் பிரதமரைத் தெரிவு செய்யுங்கள்

## ஆயர் பேரவை வலியுறுத்தியது

அரசியல் வேறுபாடுகள் மற்றும் சுய நிகழ்ச்சி நிரல்களை ஒதுக்கி வைத்துவிட்டு நேர்மையான, அனைவரின் நம்பிக்கையையும் பெறக்கூடிய இடைக்கால ஜனாதிபதி மற்றும் பிரதமரை நியமிக்க அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறோம் என இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்நிலையில் தவறும் பட்சத்தில் நிலைமை மோசமாகி அரசியல்வாதிகள் மீது மக்கள் நம்பிக்கை இழக்க நேரிடும் என ஆயர்கள் பேரவை எச்சரித்துள்ளது.

மக்கள் தங்கள் சுதந்திரத்தையும் உரிமையையும் பயன்படுத்தி நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லக் கூடிய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக பொதுத் தேர்தலை நடத்தவும், அத் தேர்தலுக்கான காலக் கேடுவை நிர்ணயம் செய்யுமாறும் அரசியல் தலைவர் களிடம் ஆயர்கள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இவ்வறிக்கையினை இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவரும் குருநாகல் மறை மாவட்ட ஆயருமாகிய மேதகு ஹெரல்ட் அன்ரனி பெரேரா மற்றும் பொதுச் செயலாளரும் கொழும்பு துணை ஆயருமாகிய மேதகு ஜே.டி.அன்ரனி ஆண் டகையும் இணைந்து ஒப்பமிட்டு வெளியிட்டுள்ளனர்.

# வெள்ளி விழாக் காணும் நம் குருக்கள்



அருட்பணி. அ. அகஸ்ரின்
(பங்குத்தந்தை– முல்லைத்தீவு)



அருட்பணி. யூட் அமலதாஸ்
(பங்குத்தந்தை, அளம்பில் இயக்குநர்– சுவாமித்தோட்டம்)



அருட்பணி. றெனோல்ட் ஜோர்ஜ்
(இணைப்பங்குத்தந்தை – அல்லைப்பிட்டி)



அருட்பணி. X.W. ஜேம்ஸ்
(இயக்குநர் – மறைக்கல்வி நடுநிலையம், இயக்குநர் – இளையோர் ஆணைக்குழு)



அருட்பணி. யூட் நிக்சன்
(மறைப்பணி – கனடா)



அருட்பணி. ஜேம்ஸ் டன்ஸ்ரன்
(முதல்வர், திருவுளப்பணியாளர் சபை கனடா)



அருட்பணி. S.J. சனிஸ்ரன்
(மறைப்பணி – கனடா)

யாழ் மறைப்பூங்காவிலே
குருக்களாய் மலர்ந்து
இருள் பிணி நீக்கிட
அருட்பணியாளர்களாய்
பணிக்குருத்துவத்தில்
ஆண்டுகள் இருபத்தைந்து
கண்டு
வெள்ளி விழாவில் மகிழ்வுறும்
எம் குருக்களுக்காய்
இறைவா உமக்கு
எமது நன்றிகள்

**பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக வெள்ளி விழாக் காணும் எம் குருக்களை வாழ்த்தி மகிழ்கின்றோம். உடல் உள சுகத்தோடு ஆண்டுகள் பல ஆண்டவருக்குப்பணி செய்ய இறைவனை இறைஞ்சுகின்றோம்.**

**-பாதுகாவலன் குடும்பம்**

# பரந்தன் அந்தோனியார் ஆலயம் புனரமைப்பு



பரந்தனில் புதிதாகப் புனரமைப்புச் செய்யப்பட்ட புனித அந்தோனியார் ஆலயம் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண் டகையால் அபிஷேகம் செய்து, திறந்து வைக்கப்பட்டு, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பரந்தனில் அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆலயம் 1976 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டி முடிக்கப்பட்ட ஓர் ஆலயமாகக் காணப்படுவதுடன், கடந்த 44 வருடங்களுக்கு மேலாக இவ் ஆலயத்தின் புனரமைப் புப் பணிகள் மேற்கொள்ளப்படாது காணப்பட்ட நிலையில், குறித்த ஆலயமானது, உள்ளூர்ப் பங்குமக்கள், இந்து மக்கள் மற்றும் புலம்பெயர் வாழ் உறவுகளினதும் நிதிப் பங்களிப்புடன் சுமார் 72 இலட்சம் ரூபா செலவில் புனர மைப்புச் செய்யப்பட்டுள்ளது.

பரந்தன் பங்குத்தந்தை ஆர். எச். சகாயநாயகம் அடிகளின் நெறிப்படுத்தலில் இப்புனரமைப்புப்பணிகள் நடைபெற்றன.

# எமது எண்ணம்

## தவறிப்போன தேசியக் கடமை

ஜனாதிபதிப் பதவியில் இருந்து கோட்டாபய ராஜபக்சவை விலகுமாறு கோரி தென் இலங்கையில் நடத்தப்பட்ட போராட்டங்களை ஒரு கிளர்ச்சியின் வெளிப்பாடுகளாக மட்டுமே ஈழத்தமிழர்கள் அணுகவேண்டும். அந்தக்கிளர்ச்சியானது ஓர் அரசியல் புரட்சி அல்ல என்ற புரிதல் இங்கு அவசியமாகிறது. புரட்சி என்றால் ஏதே னும் ஒரு கொள்கையோடு நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

இங்கே கிளர்ச்சியாளர்கள் பொருளாதார நெருக்கடி, எரிபொருட்கள் இல்லாமை போன்ற காரணங்களை முன் நிறுத்தி கோட்டாபயவுக்கு எதிரான கிளர்ச்சிகளை நடத்தியுள்ளனர். இக் கிளர்ச்சி கடந்த சனிக்கிழமை ஒன்பதாம் திகதியன்று மேலும் ஒரு தற்காலிக வெற்றியைப் பெற்றுக் கொண்டது. ஆனால், இந்தக் கிளர்ச்சியை இயக்கியவர்களால் ஓர் அரசியல் புரட்சியாக இதனை மாற்ற முடியாமல் போனதை ஈழத்தமிழர்கள் இரண்டு காரணங்கள் ஊடாக நோக்கவேண்டும்.

முதலாவது, இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பை ( unitary constitution) இந்தத் தென்னிலங்கைச் சக்திகள் மாற்ற விரும்பாமை. அதாவது, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கான அதிகாரப்பங்கீட்டு முறைமையை ( Power Sharing) உருவாக்க வேண்டும் என்பதை ஒத்துக்கொள்ளாமல் வெறுமனே சிறுபான்மை உரிமைகள் ( minority rights ) பற்றியும் பன்மைத்துவச்சமநிலை ( pluralism and equality ) பற்றியும் மட்டுமே பேசுகின்றமை.

அதாவது, இலங்கைத் தீவில் வரலாற்று ரீதியாகக் குறைந்த பட்சம் இரண்டு தேசங்கள் இருக்கின்றன என்பதையோ தேசிய இனப்பிரச்சினை என்பதை ஓர் மூலப்பிரச்சினை என் பதையோ ஒத்துக் கொள்ள மறைத்து, அல்லது ஒளித்து, அதன் பக்கவிளைவான பொருளாதாரப் பிரச்சினையை மாத்திரமே முன் நிறுத்திப் பேசுகின்றமை.

இரண்டாவது, பௌத்த மதத்துக்கான அரசியல் யாப்பு ரீதியான முன்னுரிமையை மாற்றி மத சார்பற்ற அரசாக இலங்கையை மாற்ற விரும்பாமை.

மக்களாட்சி அரச முறையில் மதம் தொடர்புபடக் கூடாது என்பதை ( religious interference in politics) தமது தற்காலிகத் தேவைக்காகச் சொல்ல முன்வரும் போராட்டக்காரர்கள், அரசியல் யாப்பில் நிலைபேறாக மதச்சார்பின்மை (constitutional secularism) உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றோ, இனப்பிரச்சினையின் மூலகாரணங்களில் ஒன்றாகத் தொடர்ந்தும் சிங்களத் தேரவாத பௌத்தம் வடக்குக் கிழக்கில் முதன்மைப்படுத்தப்படுவதால், அதுவும் கிளர்ச்சிப் போராட்டம் தெற்கில் நடந்த போதே தமிழ் மக்கள் வடக்குக் கிழக்கில் கண்ணுற்றுக் கொதித்தெழுந்த மத மேலாதிக்கம் கை ஓங்கியிருக்கும் அளவுக்கு களநிலைமை, ஏற்படுத்தியுள்ள சிக்கல் பற்றி எந்தவித புரிதலையும் வெளிப்படுத்தவில்லை.

மாறாக, ஈழத்தமிழர்களின் தலைமைகள் தொடர்ச்சியாக நிராகரித்து வந்துள்ள சிங்கக் கொடியின் கீழ் தமிழர்களும் இணைந்து போராட முன்வர வேண்டுமென்று தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றமை.

இந்த இரண்டு அடிப்படை இயலாமைகள் தொடர்பான புரட்சிகரமான சிந்தனைகளை வெளிப்படுத்த தென்னிலங்கைச் சக்திகள் தயாராகாத நிலையில், தமிழர்களின் ஈடுபாட்டுடன் இந்தக் கிளர்ச்சி முழுத் தீவுக்குமான ஒன்றிணைந்த ஓர் அரசியல் புரட்சியாக மாறமுடியாது.

காலிமுகத்திடல் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்ற இளைஞர்கள் இதை அரசியல் ரீதியாகப் புரிந்திருக்க வாய்ப்பில்லை என்றால், அவர்களுக்குத் தேவையான புரிதலை, கிளர்ச்சியில் இணையாமல் வெளியில் நின்றவாறே புகட்டியிருக்க வேண்டிய கடமை ஈழத் தமிழர்கள் தெரிவு செய்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய தலையாய கடமை.

அந்தக் கடமையைத் தனித்தனியாக மேற்கொள்ளாமல், கட்சி பேதங்களுக்கு அப்பால் சென்று, இயன்ற அளவு தமக்குள் இணைந்து, பதின்மூன்று தமிழ்த் தேசியநாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது கடமையைச் சரிவர, காலம் தாழ்த்தாது நிறைவேற்றியிருக்க வேண்டும்.

இக் கடமை தான் தவறியது என்றால் யூலை ஒன்பதாம் திகதிக்குப் பின்னரான சூழலில் கூட செய்ய வேண்டிய தமிழ்த் தேசியக் கடமையைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் செய்யத்தவறியுள்ளன.

இந்நிலையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் விரைவில் ஒன்றுகூடி இன்றைய இலங்கை அரசியல் சூழலில் எடுக்கவேண்டிய தீர்மானம் என்ன என்பதை சீராகத் தீர்மானிப்பதற்கு முன்வரவேண்டுமெனவும், பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்துள்ள இலங்கைத்தீவை மீட்டெடுக்கக்கூடிய சிறந்த தலைமைத்துவத்தை தேர்ந்தெடுக்க வேண்டுமெனவும் வடக்கின் மதத் தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளமையை இங்கு கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# பொன்விழாக் காணும் நிரந்தர மறையாசிரியர்



யாழ் மறைமாவட்டத்தில் பணியாற்றி வரும் நிரந்தர மறையாசிரியரான திரு.ம. ஜெயசீலன் அவர்களின் மறைப்பணியின் பொன்விழா நிகழ்வு கடந்த 16ஆம் திகதி அவருடைய பணித்தளமான பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் நடைபெற்றது. காலை பொன்விழா நன்றித்திருப்பலியும் தொடர்ந்து அவரின் பணிநயப்பு நிகழ்வும் பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வரும் பங்குத்தந்தையுமான அருட்திரு பெனற் அடிகளின் தலைமையில் நடைபெற்றது.

பொன் விழாக் காணும் நிரந்தர மறையாசிரியராகிய திரு. ம. ஜெயசீலன் அவர்களை பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**வாசகர்களின் கனிவான கவனத்திற்கு!**

**அச்சுப்பொருட்களின் விலையேற்றம் காரணமாக இவ் இதழ் முதல் பாதுகாவலன் பத்திரிகை ஒன்றின் விலை ரூ.50 ஆகும். -ஆசிரியர்-**

# துயர் பகிர்கின்றோம்


யாழ். மறைமாவட்டக் குருவும் புனித மடுத்தீனார் சிறிய குருமட அதிபரும், புனித யோசப்வாஸ் தமிழ் இறையியல் கல்லூரி இயக்குநருமாகிய அருட்திரு ஜெயறஞ்சன் அடிகளாரின் அன்புத் தாயார் **திருமதி அன்னமலர் ஞானறஞ்சிதம்** அவர்கள் கடந்த 03.07.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும், மற்றும் பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

# குளமங்கால் பங்கில் முதியோர் விழா

குழமங்கால் பங்கைச்சேர்ந்த 72 முதியோரை இணைத்து முதியோர் விழா கடந்த 17.07.2022 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் முதியோர்களுக்கிடையிலான கலந்துரையாடல், அனுபவப் பகிர்வு என் பன வற்றுடன் பங்கில் முதியோர் பங்கு என்னவென்பது பற்றியும் சிந்திக்கப் பட்டது. ஈற்றில் இராப் போசனமும் பரிமாறப்பட்டது

இளையோர் மன்றத்தினதும் வழிபாட்டுக் குழுக்களினதும் ஒத்துழைப்புடன் பங்குத்தந்தை அருட்பணி ச. பாஸ்கரன் அடிகளாரின் வழிநடத்தலில் மேற்படி முதியோர் தினமானது மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 08.09.1938

இறப்பு 14.07.2020

## அருட்பணி R.M.G.நேசநாயகம்

“சீவியத்தில் நேசித்தவர்களை மரணத்தில் மறவாதீர்கள்”

எம் வாழ்வின்
வேராக இருந்தவரே
நேசத் தந்தையே!
வாழ வைத்த தெய்வமே!

உமக்கு ஒருபோதும்
மரணம் இல்லை
எம் இதயங்களில்
என்றும் இருக்கின்றீர்
இறைவனில் இளைப்பாறும்

AD/54

உயரப்புலம், ஆனைக்கோட்டை **கோவிலம்மா குடும்பத்தினர்**

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 04.09.1937

இறப்பு 23.07.2019

## மோசஸ் அன்ரனிப்பிள்ளை

(குமார்)

(ஓய்வு பெற்ற பொலிஸ் CID இன்ஸ்பெக்ரர்)

மனங்களில் நிதம் வாழும்
மகத்தான மாமனிதன்
எங்கள் ஆசை அங்கிள்
எங்கு சென்றீர் என்று
எப்படி நாம் கேட்போம்?
உயிருள்ள எம்முடன் உயிர் மூச்சாகி
உயிர்ப்பற்ற எம் உடைமைகளில்
உண்மையின் உருவமாகி
உறைகின்ற அன்புருவே!
இறை அருளில் இன்புற
இறைவனை இறைஞ்சி
கூப்புகின்றோம் கரங்களை அல்ல
எம் உள்ளங்களை...

பிரிவின் துயரில்
சகோதரி, பெறா மகள்,
மருமக்கள், அன்புறவுகள்.

54, 2/1 இராஜசிங்க வீதி,
வெள்ளவத்தை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 02 . 02 . 1959



இறப்பு 18 . 06 . 2021

## இம்மேக் யூவன்டினஸ் தம்போ Ph.D.I.D.

இதயமதில் நிறைந்து நிற்கும்
எங்கள் அன்புருவே
எம்மை விட்டுப் பிரிந்து செல்ல
உமக்கு மனம் வந்ததா?
மனம் நொந்து வாடுகின்றோம்
உன் இழப்பால்
இதயம் கனத்துப் போகின்றது
மீண்டும் ஒருமுறை வாராயோ?
வாய் விட்டுக் கதறுகின்றோம்
வருவாயா... எம்முடன் உறவாட..?
அமைதியுடன் உறங்கிடுவாய்
ஆண்டவன் அடியினிலே...

**பிரிவால் துயருறும்**

வெர்ஜீனியா - மனைவி
மைக்கேல் எமிலி - பிள்ளைகள்
அன்னா லூட்ஸ், ஜோசப் போன்ஜியன் தம்போ - பெற்றார்,
ஓய்வுநிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை - மாமனார்
விஜிதா - டட்லி தம்பிநாயகம், Dr. பஸ்டி (கரண் தம்போ),
இந்திரா, லலன்தி, பீட்டர் ரட்னவேல் - சகோதரர்கள்

# கனவு காண்போம்

கத்தோலிக்க திருஅவையின் பெருந் தலைவர் போப் பிரான்சிஸ் எழுதிய“கனவுகாண்போம்”என்றநூலைப் படித்தேன். தொடர்ந்து எழுதமுன் போப் பிரான்சிஸ் ஒருவரையே இன்றைய உலகில் ஒரு நல்ல, நேர்மையான வெளிப்படைத் தன்மை கொண்டவரான, துணிச்சலான, கத்தோலிக்க திருஅவைக்கு அப்பால் சென்று இவ்வுலகிற்கு ஒளிகாட்ட முடிந்தவராக, உயர்ந்து நிற்கும் ஒரு சிறந்த தலைவர் என்பதில் எனக்கோ பாருக்கோ இரண்டு கருத்து இருக்க முடியாது.

21ம் நூற்றாண்டு கண்ட ஓர் பெரும் சீர்திருத்தவாதி. பயந்து குறுகி முதுகு சொறியும் கோழையல்ல, அவர் மண்வெட்டியை மண்வெட்டி என்று சொல்வார். றோஜா மலரை றோஜா மலரென்பார். இப்படிப்பட்ட ஒரு தலைவரை இன்றைய உலக அரசியல் அரங்கிலோ மத நிறுவனங்களிலோ காண முடியவில்லை. தற்காலதலைமைத்துவ இலக்கணத்திற்கு ஒரு சிறந்த இலக்கியமாக வாழ்பவர். இப்படிப்பட்ட தலைவர்களுக்கு எதிரிகள் நிச்சயமாக இருப்பார்கள். போப் பிரான்சிஸ் அவர்களுடைய தலைமைத்துவத்திற்கும் எதிரிகள் இருக்கிறார்கள். இவர்கள் திருஅவைக்குள்ளேயே இருக்கிறார்கள்.

இவர்கள் யாரென்று பார்க்கும் பொழுது இந்த எதிரிகளின் பொய்க் கோலம் உரியப்படும். தங்கள் பதவிகளைத் தங்கள் சௌகரியமான செல்வந்த வாழ்க்கையை தக்க வைத்துக் கொள்பவர்களாகவே இவர்கள் வெளிப்படுத்தப்படுவார்கள்.போப் பிரான்சிஸ் அவர்களைக் கடுமையாக விமர்சிக்கும் இவர்களுக்கு அவர் சொல்வதென்ன? “என்னை விமர்சியுங்கள் ஆனால் வாருங்கள் உரையாடுவோம்” என்று அழைக்கும் பொழுது, அவர்கள் இன்று வரை உரையாடலுக்கு ஓர் அடியெடுத்து வைத்ததாகப் பதிவெங்கும் இல்லை.

தூரத்தே நின்று விமர்சிப்பவர்கள் ஏன் கிட்ட வந்து, அருகருகே அமர்ந்து உரையாட முடியவில்லை? போப் பிரான்சிஸ் அவர்களுடைய வார்த்தையும் வாழ்வும், சொல்லும் செயலும் இவர்களுக்கு ஒரு பெரும் சவால். நற்செய்தி ஏடுகள் சொல்லும் மனித விழுமியங்களை ஓர் உரைகளாக்கிப் பார்த்தால், போப் பிரான்சிஸ் நற்செய்திக்கு ஓர் சான்றாகவே வாழுகின்றார். எதற்காக இவ்வளவு பின்புலத் தெளிவு என்று வாசகர்கள் கேட்கலாம்.

**நம்பகத் தன்மை**

ஒரு தலைவனுக்கு இருக்க வேண்டிய முதற் பண்பு நம்பகத் தன்மை உலக அரசியல் தலைவர்களைப் பாருங்கள். மதத் தலைவர்களையும் பாருங்கள். பெரும்பான்மையினர் - மிகப் பெரும்பான்மையினர் - பொய்யர்கள், குறுகிய சிந்தனை கொண்டவர்கள் பக்கச்சார்புடையோர். தன்னலங் கொண்டவர்கள், மக்களைச் சுரண்டி வாழ்வோர். களவெடுப்போர், கொலை செய்வோர் இப்படிப்பட்டவர்களை ஆதரித்த ஆசீர்வதிப்போர் மதத்தில் பதவியில் இருக்கிறார்கள். இவர்களை எப்படி மதத் தலைவர்கள் என்று அழைக்க முடியும்? தலைமைத்துவத்திற்கு கிஞ்சித்தும் தகுதியற்றவர்கள். ஒரு தலைமைத்துவ வறுமை இன்று உலகில் உண்டு.

உண்மையை மறுத்த (Post truth) வடஅமெரிக்காவின் முன்னை நாள் ஜனாதிபதியான டொனால்ட் றம்பை வட அமெரிக்க கத்தோலிக்க ஆயர் கூட்டம். பகிரங்கமாக ஆதரித்து மீண்டும் டொனால்ட்ரம் ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பாரானால், இவர்களும் அதேகுட்டையில் குளிப்பார்கள். தனது சுய பிரச்சினையை மேற்கொள்ள, கற்பனையில் தானே ஒரு பயப் பீதியை உருவாக்கி உக்ரைன் நாட்டை ஆயுதத்தோடு அழித்துவரும் பொய்யன் புட்டினை, ஆதரித்து ஆசீர்வதிக்கின்றார். ரஷ்யாவின் ஓர்த்தடொக்ஸ் திருச்சபையின் பேராயர், கிறின், மகிந்த இராஜபக்ஷா யாரென்று இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் அறிவார்கள். அவன் செய்த கொலைகள், களவுகள், பின்னர் மதங்களின் பின்னால் ஒழிவதை இந்நாட்டு மக்கள் அறிவார்கள். அப்படிப்பட்ட ஓர் இரண்டாந்தர அரசியல் வாதியை உரோமைக்கு அழைத்துச் சென்று திருத்தந்தைக்கு அவரை அறிமுகம் செய்துதானும் அவர்களுடன் நின்று படமெடுத்து உலகிற்கு என்னத்தை எடுத்துச் சொன்னார், கொழும்புப் பேராயர் மல்கம்? நம்பகத் தன்மை இங்குண்டா?

ஓர் தலைவனுக்கு இருக்க வேண்டிய முதற்பண்பு நம்பகத்தன்மை, தலைமைத்துவ இலக்கியத்தில் இக்கூற்று பரவலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நம்பிக்கைத் தன்மை சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் குறைந்து வருவது கண்கூடு. நம்பிக்கைத் தன்மை குறைந்தால் உறவுகளும் அனைத்து மட்டங்களிலும் குறைந்துவரும். இன்றைய உறவுப் பிரச்சினைகளைப் பார்க்கும் பொழுது மேற்கூறிய கூற்றின் உண்மைத் தன்மையுண்டு.

**நூலின் தோற்றம்**

நான் மேற்கூறிய“ கனவு காண்போம்” என்ற நூலை போப் பிரான்சிஸ் தனது கைபட எழுதவில்லை. ஆனால் அவர் ஒஸ்ரென் ஐவெரி (Austren Ivereigh) அவர்களுடன் நடாத்திய நீண்ட உரையாடல்களில் இருந்து எடுத்து போப் பிரான்சிஸ் அவர்களுடைய மொழியில், தொனியில் எழுதப்பட்டது. ஆயினும், இது ஒரு நேர்காணலில் எழுதிய நூலல்ல. இருவருக்கிடையே நடைபெற்ற ஓர் உரையாடல் வழிநின்று எழுதப்பட்ட நூல். நூலாசிரியர்களாக இவருடைய பெர்களும் பதிவாகி உள்ளன. அந்த நாள் ஞாபகம்…

“புரட்சியில் பூத்த பூ” என்ற தலைப்பில் நான் எழுதிய நூலின் பாணியில் எழுதப்பட்டுள்ளது. ஆனால், ஒரு வேறுபாடு “கனவு காண்போம்” என்ற நூல் இருவருடைய நேரடிச் சந்திப்பில் நடைபெற்ற உரையாடலில் உருவான நூல். “புரட்சியில் பூத்த பூ” எனது கற்பனையில் ஒரு குருவானவர் எனக்குச் சொல்லியதாக அமல மரித்தியாகிகள் சபையின் நிறுவுனரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளேன். ஆத்துடன் இடையிடையே எமது நாட்டின் நிகழ்வுகளையும் விமர்சித்து இணைத்திருந்தேன். அந்த நேரம் ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றை வரைந்த ஒரு புதிய கோணம்.

யார் இந்த ஒஸ்ரென்? கத்தோலிக்க வரலாற்று ஆசிரியர், கலாநிதிப் பட்டம் பெற்றவர், ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் ஒரு விரிவுரையாளர், போப் பிரான்சிஸ் அவர்களையிட்டு ஏற்கனவே இரு நூல்களை எழுதியுள்ளார். ஒன்று : பெரிய சீர்திருத்தவாதி (2014), மற்றையது : காயப்பட்ட மேய்ப்பன் (2019) ஒஸ்ரின் போன்ற எழுத்தாளரும் ஊடக வியலாளரும் வத்திக்கானில் அறிமுகமானவர்கள். பெரிய புள்ளிகளுடன் பழகுபவர்கள், வத்திக்கானின் உள்ளும் புறமும் தெரிந்தவர்கள். இவர்களை வத்திக்கான் அவதானிகள் என்றும் அழைப்பார்கள். உண்மைத்தன்மை உடையவர்கள், ஓர் அதிகாரத்தோடு எழுதுபவர்கள்.

இவர், “பெரிய சீர்திருத்தவாதி” என்று போப் பிரான்சிஸ் அவருடைய வாழ்க்கையைப் பற்றி எழுதிய பின்னர் போப் பிரான்சிஸ் ஒஸ்ரொனை நேரடியாகவே தொலைபேசியில் தொடர்பு கொண்டு சொல்லிய வார்த்தைகள்: “அடுத்த முறை நீர் உரோமைக்கு வரும்பொழுதுஉன்னைச் சந்திக்கவும்” கோடிக்கணக்கான கத்தோலிக்க மக்களின் தலைவர் தன்னைப் பற்றி எழுதிய ஓர் ஊடகவியலாளரும் வரலாற்று ஆசிரியருமான ஒஸ்ரெனுக்குச் சொல்லிய வார்த்தைகளில் அவரது பண்பு, எளிமை, தாழ்மை தோன்றுகின்றதல்லவா? பணித் தலைமைத்துவம் தெளிவல்லவா?




**எல்லோரையும் பாதிக்கும் விடயங்கள் எல்லோராலும் கலந்துரையாடப்பட வேண்டும் என்பது போப் பிரான்சிஸ் அவர்களுடைய சிந்தனை.**

*கரைவையூர்ச் செல்வம்*

**அதிகார ஆணவம்**

இன்று எங்கள் பங்குகளில் துறவற சபைகளில் சிறு குழுமங்களில் “முதலாளிமார்கள்” என்று நியமித்தவுடன் இவர்கள் உத்தரவுகள் பீரங்கியில் இருந்து வெளியேறும் குண்டுகள் போல் பாயும். இவர்களுக்கெல்லாம் போப் பிரான்சிஸ் ஒரு பெரும் சவால். பணித் தலைமைத்துவத்திற்கு போப் பிரான்சிஸ் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அதேவேளை, உறுதியாக நிற்க வேண்டிய நேரங்களில் உறுதியாகவே செயற்படுவார்.

**கனவு**

போப் பிரான்ஸிசின் கனவென்ன? 2023ம் ஆண்டு உரோமையில் வத்திக்கானில் ஆயர்களின் மாநாடு ஒன்று நடத்தவுள்ளார். இந்த மாநாட்டில் ஆயர்கள் மட்டுமல்ல, துறவிகளும், இல்லறத்தோரும் பங்கு கொள்வார்கள். இந்த மாநாட்டிற்கு இரண்டு வருடங்களாக உலகளாவிய ரீதியில் ஆயத்தங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

எல்லோரையும் பாதிக்கும் விடயங்கள் எல்லோராலும் கலந்துரையாடப்பட வேண்டுமென்பது போப் பிரான்சிஸ் அவர்களுடைய சிந்தனை. வரவேற்க வேண்டும். அதனாலேயே 2023 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் மாபெரும் மாநாட்டில் எல்லோரும் கலந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். மறைமாவட்டங்கள் தோறும் மக்கள் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன.

இன்று இந்த நாடு, பொருளாதார ரீதியாகவும், சமூக கலாசார ரீதியாகவும் ஒரு அடிமட்டத்தில் வந்து நிற்கின்றது. எல்லா மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் இந்த நிலையில் இருந்து மீள எல்லா மக்களுடனும் கலந்துரையாடப்படுகின்றதா? ஆள்வோர் மக்கள் குரலுக்குச் செவிமடுக்கிறார்களா? நாடாளுமன்றத்தில் இருப்போர் பழைய வேதாளம் அந்த முருக்கை மரத்தில்தான் ஏறி நிற்கின்றது.

கனவுக்குச் செல்வோம். போப் பிரான்சிஸ் வரவிருக்கும் மாநாட்டை Synod என்றழைத்தார். அத்துடன் Synodality என்ற திருஅவையின் பழமையான ஒரு பாதையைத் தெரிந்து கொண்டார். இந்தச் சொல் Synodality கிரேக்க மொழியில் Syn - dos என்ற வேரிலிருந்து பிறப்பிக்கப்பட்டது. இதை ஆங்கிலத்தில் “walking together” என்ற நூலில் மொழிபெயர்த்துள்ளார். ஒன்றாக நடப்போம் என்று மொழி பெயர்ப்போமா? “கனவு காண்போம்”என்றுமொழிபெயர்ப்போமா? ஆனால் எங்கள் தமிழ்த் திருஅவை “கூட்டொருங்கியக்கம்” என்று மொழிபெயர்த்துள்ளார்கள். (மன்னிக்கவும் ஏதோ தமிழை ஜேர்மனில் ஒலிப்பது போல் ஒரு தொனி) ஒன்றுமை (Unity) என்ற சொல்லிற்குக் கூட்டொருமை என்ற பதத்தையும் சொற் களஞ்சியம் (1965) தருகின்றது. ஆகவே, “கூட்டொருங்கியக்கம்” என்ற சொல்லை நியாயப்படுத்த இடமுண்டு. “இயக்கம் என்ற சொல் அசைவைக் கொடுத்தாலும் “நடப்பது”, “பயணிப்பது” என்ற பொருளைத் தெளிவாக்கவில்லை.

**ஒன்றாக நடப்போம்**

“ஒன்றாக நடப்போம்” என்ற சொற்றொடரை போப் பிரான்சிஸ் எவ்வாறு பயன்படுத்துகின்றார்? ஒன்றாக நடப்பது அன்றேல் ஒன்றாகப் பயணிப்பது, ஏதோ ஒரு வகையில் ஒரு முடிவுக்கு, ஓர் ஒப்பந்தத்திற்கு வர முனைவதல்ல. முரணாக, வேற்றுமைகளை மதித்து ஓர் ஒப்புரவில் ஏற்றுக்கொண்டு, வேற்றுமைகளைத் தக்க வைத்துக் கொண்டு தூரத்தே தெரியும் ஓர் இலட்சியத்தை நோக்கி ஒன்றாகப் பயணிக்கலாம் என்பது போப் பிரான்சிஸ் அவர்களின் சிந்தனை போப் பிரான்சிஸ் அவர்களுடைய கனவில் ஒரு முக்கியமான சொல் - செயல் - inclusivity அதாவது அனைவரையும் உள்வாங்க வேண்டும் எவரையும் புறந்தள்ளக்கூடாது. (exclusive)

(தொடரும்...)

# காவலன் கலசம்

## விழித்தெழு விழிகொடுக்க

ஒளி உலகாம் வெளி உலகைக் காண
கருவறை எனும் இருட்டறையில்
உருப்பெற்ற மனிதா
நிலையில்லா இவ் உலகில்
நீ மட்டும் நிரந்தரமா என்ன?
உன் முடிவு கூட இருட்டறையாம்
கல்லறைதான்.

ஒளி உலகில் உன் விழிகொண்டு
விடியல்கள் பல கண்டாய்
முடிவுதான் இருட்டறையே

மடிந்த பின்னும் ஏன் இருவிழிகள்
ஒளி உணரா விழி உடனே
ஓராயிரம் மக்கள் இவ் உலகில்
ஒருவர் வாழ்விலேனும்
ஒளி கொடுப்பாய்
உன் விழிகொண்டு
மாண்ட பின்னே மக்கிப்போகும்
உன் விழியைத் தானம் கொடு
தரணியில் தாண்ட பின்னும்
தெய்வமாவாய்...

## உறவின் பாலங்களை இணைப்போம்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாம் தொழுதுண்டு
பின் செல்வர் என்ற
பொய்யா மொழிப் புலவரின்
வார்த்தைப் பகிர்வுக்குள்...

உழுது பண்படுத்தப்படாமல்
போய்விட்ட
பல மன நிலங்களே
அதிகமதிகம்....
இன்றோ
ஏட்டுச் சுரக்காய்களை
தாட்பார்களில் மாட்டி வைத்து விட்டு
அரசறிவியல் நடத்துகின்றனர்

ஆப்பு இழுக்கும்
தலைமைத்துவங்களினால்
வேதனையுற்றுத் தவிக்கும்
இவ்வுலகில்....

இறையரசின் கனவுகளை
நனவாக்கிட
இன்றோ எம் தேசத்தின்
உறவுப் பாலங்களை
இணைப்போம்...

கச்சதீவில் குடிகொண்டிருக்கும்
கோடி அற்புதராம் எம் புனிதரிடம்
பரிந்துரைப்போம்....

எம்.யோண் பற்றிக்
சுன்னாகம்

## கடுகு விதையும், புளிப்பு மாவும்

இந்த உலகில் என்னால் எந்த மாற்றமும் செய்ய முடியாது என்ற சலிப்போ, விரக்தியோ உங்களுக்கு ஏற்படுகின்றதா? வாருங்கள், ஆறுதல் கொள்வோம். நமக்காகத்தான் இயேசு இந்த உவமையைச் சொல்லியிருக்கிறார். கடுகு விதை எவ்வளவு சிறியது. ஆனாலும், அது வளர்ந்து பெரிய மரமாகிறது. வானத்துப் பறவைகளுக்கு நிழல் தருகிறது.

புளிப்பு மாவின் அளவு சிறியது. இருப்பினும், மாவு முழுவதையும் அது புளிப்பேற்றுகிறது. அதுபோலத்தான், ஒவ்வொரு சிறிய செயலும், ஒவ்வொரு சிறிய சொல்லும். அவை மௌனமாக இந்த உலகின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.



நாமும் அப்படித்தான். ஒவ்வொரு சிறிய செயல், ஒரு புன்னகை, ஒரு பாராட்டு வார்த்தை, ஒரு அன்பான தொடுதல்... இவற்றின் வழியாக ஒரு சில மனிதர்களின் வாழ்வைத் தொட முயற்சிப்போம். இறுதியில், ஏராளமான மனிதர்கள் தொடப்படுவார்கள். இந்த உலகம் இறைவன் வாழும் இனிய பூமியாக மாறும்.

இன்று நாடளாவிய ரீதியில் பெரும் பொருளாதாரப் பிரச்சினையில் பசியால் வாடும் எமது அயலவர் மட்டில் பரிவோடும் அன்புணர்வுடனும் எம்மால் இயன்ற உதவிகளைச் செய்வோம். அவர்கள் மகிழ்வில் நாம் மகிழ்வடைவோம்.

*இன்றைய நாளில் ஒரு சிறிய முயற்சி எடுப்போமா?*

இறையாட்சியின் வேந்தனே இயேசுவே,

உம்மைப் போற்றுகிறேன். இந்த நாளை ஆசீர்வதித்தரும். இந்த நாள் முழுவதும் எனது ஒவ்வொரு செயலும், சொல்லும், புன்னகையும், ஊக்க மொழிகளும் இந்த உலகிற்கு விண்ணரசின் மதிப்பீடுகளை அறிவிக்கட்டும்.

## இளையோர் காவியம்

இடி தாங்கிக்கே
இடி தாங்கி நீ

உன் வியர்வை
வாழ்க்கை மின்விளக்கில்
இணைப்பு

நீ படுகிற அவஸ்தை
உலகத்துக்கு அவசர சிகிச்சை

உன் வார்த்தைகள் கூட
சேகரிக்கப்படுகிற வாழ்க்கைக்கு
நீ கைவிடமாட்டாய்
கைவிட்டவரைக் கூட
உன்னில் பரிதாபம் வரும்
செய்கிற மனிதாபிமான உதவி

உன் உழைப்பு
வயல்கூட வியக்கும் பயிர்

நீ வளர்ப்பதில்லை களை
மாறாக நடுகிறார்கள் களை

உடல் கேட்கும்
நீ எடுக்கமாட்டாய் ஓய்வு

பொதுநலத் தோட்டத்தின்
தொழிலாளி நீ

உன் வாழ்க்கை கூட
கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற
தர்மம்

எப்பவும் வாழ்வினுடைய
மையம் இளமை

இளமை தற்காலிகம் என்பது
உன் திறமைகள் மறுதலித்த உண்மை

என்றும் வரலாறுகளுக்குள்
வாழ்ந்து கொண்டிருக்கும்
உன் இளமை

*உயிரோவியன்..*

## ‘திருமறை முத்துக்கள்’

அருட்பணி. நே. யூட்நாஸ்

**நம்பிக்கை அறிக்கையின்**
**பத்தாம் பிரிவு**

**150.எவ்வாறு சாவான பாவம் ஆன்மாவைக் கொலை செய்கிறது?**
ஒரு ஆன்மாவின் அதி உன்னத வாழ்விற்குத் தேவையான புனிதப்படுத்தும் அருளை இப் பாவம் தடுப்பதன் மூலம் இது ஆன்மாவைக் கொலை செய்கிறது.

**151.சாவான பாவத்துள் வீழ்வது மிகப்பெரும் தீமையா?**
தீமைகளுக்குள் மிகப்பெரும் தீமை சாவான பாவத்துக்குள் வீழ்வது ஆகும்.

**152.சாவான பாவத்தோடு இறப்போரின் ஆன்மாக்கள் எங்கே செல்கின்றன?**
சாவான பாவத்தோடு இறப்போரின் ஆன்மாக்கள் முடிவில்லாக் காலத்திற்கும் நரகத்திற்குச் செல்கின்றன.

**153.அற்ப பாவம் என்றால் என்ன?**
அற்ப பாவமானது ஆன்மாவைக் கொலை செய்வதில்லை. மாறாக இறைவனுக்கு விருப்பமின்மையை உண்டாக்கி இது சாவான பாவத்திற்கு வழி வகுக்கிறது.

**154.ஏன் இது அற்ப பாவமென அழைக்கப்படுகிறது?**
இது அற்ப பாவமென அழைக்கப்படுகிறது காரணம் சாவான பாவத்தை விட இப் பாவமானது இலகுவாக மன்னிக்கப்படுகிறது. அத்தோடு சாவான பாவத்திற்கு இருக்கவேண்டிய முக்கியமான மூன்று நிபந்தனைகளில் ஏதாவது ஒன்று இல்லாதபோது இது அற்பபாவமாக அமைகிறது.

**நம்பிக்கை அறிக்கையின்**
**பதினோராம் பிரிவு**

**155.நம்பிக்கை அறிக்கையின் பதினோராம் பிரிவு என்ன?**
உடலின் உயிர்ப்பை நம்புகிறேன்.

**156.உடலின் உயிர்ப்பை நம்புகிறேன் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது என்ன?**
உடலின் உயிர்ப்பு என்பதால் நான் விளங்கிக் கொள்வது யாதெனில் இறுதி நாளில் நாம் அனைவரும் எமது உடலோடு மீண்டும் உயிர்த்தெழுவோம் என்பதாகும். இயேசுவின் உயிர்ப்பே இதற்கு அடிப்படையாகும்.

**நம்பிக்கை அறிக்கையின்**
**பன்னிரெண்டாம் பிரிவு**

**157.நம்பிக்கை அறிக்கையின் பன்னிரெண்டாம் பிரிவு என்ன?**
நிலை வாழ்வை நம்புகிறேன்.

**158.நிலை வாழ்வை நம்புகிறேன் என்பதன் பொருள் என்ன?**
நிலை வாழ்வை நம்புகிறேன் என்பதன் பொருள் நல்லோர் முடிவில்லாக் காலத்திற்கும் விண்ணக மகிமையிலும் மகிழ்ச்சியிலும் வாழ்வார்கள் என்பதாகும்.

(தொடரும்...)


## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.
*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*

13

### அத்தியாயம் 8

**தமிழ் வழிபாடுகளில் பண்பாட்டு மயமாக்குதலை ஆர்வத்துடன் நடத்தினால் மட்டும் போதாது.**



**8.2 பண்பாட்டு மயமாக்குதலின் போர்வையில் நடந்ததென்ன?**

வழிபாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கென்று மறைமாவட்டக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. உரோமை அதிகார பீடத்தினால் பிறப்பிக்கப்பட்டிருக்கும் ஒழுங்குகளை மாத்திரம் அணுவணுவாகக் கடைப்பிடித்தால் போதாது. எமது நலன் கருதி பண்பாட்டு மயமாக்குதலை, தமிழ் தலைவர்கள் பொறுப்பில் விட்டிருக்கிறார்கள். அதனால் வழிபாட்டை ஆயத்தம் செய்பவர்கள, தங்கள் பொறுப்புகளை உரியமுறையில், வழிபாட்டின் மையப்பொருளை மழுங்கடிக்க விடாது இணைக்க வேண்டும்.

இவைகளைத் தெளிவுபடுத்த, இயேசுவின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றிச் சிந்திப்பது பொருத்தமாக இருக்கும்.

**8.3 போதகர் இயேசு, சினத்துடன் சீறி, ஆலயப் பெருவிழா ஆயத்தங்களைச் சிதறடிக்கின்றார் (யோவான் 2: 13-22)**

யூதர்களுடைய பாஸ்கா விழா விரைவில் வரவிருந்த தால் இயேசு எருசலேமிற்குச் சென்றார்.

இறைவன் யூதமக்களை அடிமைத்தனங்களிலிருந்து விடுதலைக்கு நீண்ட பயணத்தினூடாக இட்டுச் சென்றார்.

வனாந்திரத்தினூடான விடுதலைப் பயணத்தின்போது பல அற்புதங்களையும் படிப்பினைகளையும் கொடுத்து, அம்மக்களைத் தம் மக்களாகவும், தாமே உண்மையான கடவுளென்றும் மீண்டும் மீண்டும் கற்பித்தார். பொய்த் தேவர்களையும் விக்கிரக ஆராதனைகளையும் கடுமையாகக் கண்டித்தார்.

இஸ்ரவேலர் உண்மையான ஒரே கடவுளை வழிபடவும், தமது அற்புதங்கள் நிறைந்த விடுதலை நிகழ்வுகளை நினைவுகூரவும், விழாக்கொண்டாடவும் எருசலேமில் ஆலயம் அமைத்தார்கள். அங்கு விடுதலை நினைவுகூரும் விழாவைப் பாஸ்கா விழாவாகக் கொண்டாடினர். ஆனால் இவ்விழாவின் சடங்குகள் பலவித மாற்றங்களைப் படிப்படியாகக் கண்டன. இதன் காரணமாக விடுதலை விழாவின் மையப் பொருள் மழுங்கடிக்கப்பட்டது.

இயேசு, இவற்றைக் கண்டித்தது மாத்திரமல்ல, அவர்களுடைய மேசைகளைப் புரட்டிப் பணப் பெட்டிகளையும் தூக்கி எறிந்து உரத்த குரலில் - புனிதமான என் தந்தையின் இல்லத்தை மாசுபடுத்தாதீர்! என்றார். இயேசு ஜெருசலேம் தேவாலயத்தின் உள்ளே ஏன் இவ்வளவு சினங்கொண்டார்? ஏன் சிதறடித்தார்? ஏன் அட்டகாசம் பண்ணினார்? என்ற கேள்விகளை நாம் பார்க்கும் பொழுது, பல பொருத்தமான சிந்தனைகள் எழுகின்றன.

இரக்கம் நிறைந்த இறைவனின் மகன் இயேசு, அன்பு நிறைந்த அந்த இயேசு, ஏழைகள் மட்டிலே, துன்பப்படுபவர்கள் மட்டிலே, பார்வையற்றவர்கள், பேசமுடியாதவர்கள், பலவிதமான உபத்திரவங்களுக்கு உள்ளாகி வேதனைப்படுகிறவர்களுக்கு ஆறுதல் கொடுப்பவர்! அவர்களைக் குணமாக்கினவர். இரக்கம் காட்டியவர்.

(தொடரும்...)



# வரலாற்றில் ஒரு தலைவர்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

(சென்ற இதழின் தொடர்ச்சி..)

**2. மறை வாழ்வில் சீர்திருத்தங்கள்**

1968இல் மன்னாரில் பங்குத் தந்தையாக இருந்த அருட்பணி. எஸ்.ஏ. மைக்கல்சாமி அ.ம.தி.க்கு இவர் எழுதிய கடிதத்தில் விருந்து கொடுப்பது பல மக்களுக்குப் பலன் உள்ளதாக இருந்தாலும் அதனால் அவ்வாலயத்தில் விளைந்த பல்வேறு தீமைகள் காரணமாக அதனை இனி வருங்காலத்தில் நிறுத்தி அப்பணத்தை, ஏழைகள், பெற்றோரற்றோர், முதியோர் இல்லங்களுக்குக் கொடுப்பது நல்லது என்று சாரப்படக்குறிப்பிட்டு மக்களுக்கு ஆலோசனை வழங்குமாறு எழுதியதை இங்கு குறிப்பிடலாம்.

**உரிமையற்றோருக்குத் திருவருளடையாளங்கள்**

திருவருளடையாளங்களைப்பொறுத்தவரை முதல்நன்மை, உறுதிப்படுத்தல் பெறும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் பிள்ளைகள் தலையை மூடி, துகில் போடக்கூடாது என்றும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் திருமணத் தம்பதிக்கு முழங்காலில் இருக்கின்ற இருக்கை போடக் கூடாது எனவும், தமது கோவிலில் கிறாதிக்கு உள்ளே சென்று (பலிப் பீடத்தைச் சுற்றியுள்ள தடுப்பு) திருமண அருளடையாளத்தைப் பெற அவர்களுக்கு உரிமையில்லை என்றும், தம்மோடு ஒரே வரிசையில் இருந்து நற்கருணை பெறுவதற்கு உரிமையில்லை என்றும் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்திலேயே நற்கருணை கொண்டு சென்று வழங்கப்பட வேண்டும் எனவும் கடுமையான கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்தனர்.

மேலும் தம்மோடு சமமாக உட்காராமல் ஒரு குறிப்பிட்ட பகுதியிலேயே உட்கார வேண்டும் எனவும், தலையை மூடியபடியோ தோளில் சால்வை போட்டு, குடைபிடித்துச் செருப்பு அணிந்த படியோ மேலுடலைச் சட்டையினால் மறைத்த படியோ வரக்கூடாது எனவும் கிறிஸ்தவத்திற் கெதிரான அடக்குமுறை மனப்பான்மையைக் கடைப்பிடித்தனர்.

சமூகத்தில் இடம்பெற்ற இவ் விடயங்களை ஆலயத்திற்குள்ளும் சரிவரக் கடைப்பிடித்தனர். வீரகேசரி நாளிதழ் 1970.05.20இன்படி தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் திருமணமொன்றைப் பொலிஸ் காவலுடன் அவர்கள் சேர்ந்திருந்த உயர் சமூகத்தினரின் ஆலயத்தில் அருட்பணி.வில்லவரசிங்கம் பங்குத்தந்தையாக இருந்தவேளை தனது மேற்பார்வையில், தம்பதியினர் முழங்காலிலிருக்கும் இருக்கையை அவர்களுக்கும் வழங்கி நடாத்தி முடித்த இவர், ஆலயத்தைப் பூட்டவேண்டியதாயிற்று. பல சவால்கள் மத்தியில் இறை மக்களின் பொதுநன்மை கருதி இவரால் நடைமுறைப்படுத்தப்பட்டஇச்சீர்திருத்தங்களின் சிறப்புக்களை மக்கள் உணர்ந்து கொள்ள நீண்டகாலம் செல்லவேண்டியதாயிற்று.

முன்பு இறந்தவர்களின் பூதவுடல்கள் எவருடையதாயினும், ஆலயத்திற்குக் கொண்டு செல்லப்படுவதற்குப் பெரும்பாலான இடங்களில் கத்தோலிக்கர்கள் விரும்பவில்லை. ஆயினும் இவரது முயற்சியின் பின்பு இந்நடைமுறையில் மாற்றம் ஏற்பட்டதைக் காணலாம். ஐரோப்பிய மறையறிவிப்பாளர்களின் காலத்தில் அருட்பணியாளர்கள் காப்பை அணிந்து இறந்தவரின் வீட்டில் இருந்து கல்லறை வரைக்கும் பாடிக்கொண்டு செல்லும் வழக்கம் இருந்தது. இதனை மாற்றியமைத்தவரும் இவரே. ஆலயத்தில் மட்டும் இறந்தவரின் பூதவுடலை வரவேற்றுச் சடங்கை நடத்திமுடித்தல் போதுமானது எனவும், வேறோர் தமது சக அருட்பணியாளர்களின் நெருங்கிய உறவினரின் மரணவீட்டிற்கு (பெற்றோர், சகோதரர்கள்) அருட்பணியாளர் சமூகம் தரலாம் எனவும் அருட்பணியாளர்களுக்கான சுற்றுமடல் 1963 ஜனவரி 15இல் குறிப்பிட்டார். எதிர்ப்புகள், பகைமைகள் வந்தாலும் மன உறுதியுடனிருந்தார்.

**பொதுநிலையினரின் பாரம்பரியப் பணிகள்**

போர்த்துக்கேயர் காலம் தொடக்கம் ஆங்கிலேயர் காலம் வரை திருஅவையின் மறைப்பணிகளில் பங்கேற்பதற்கு மறையறிவிப்பாளர்களால் பல சுதேச இல்லறப் பொதுநிலையினர் உருவாக்கப்பட்டனர். இவர்களில் பலர் அர்ப்பணத்துடன் திருச்சபையின் தேவைகளுக்கும் ஆலயப்பணிகளுக்கும் தமது உழைப்பையும் பொருளையும் வழங்கியதோடு பல நாட்கள் தமது குடும்பப் பொறுப்புகளை விட்டுவிட்டு அருட்பணியாளர்களுடன் சென்று தங்கியும் திருஅவையின் வளர்ச்சிக்கு உதவிசெய்தனர். இவ்வாறாக ஆலயப் பணிகளைப் பரம்பரை வழி செய்து வந்த மூப்பர் (குருவின் தேவைகளைக் கவனிப்பதுடன் விசேடமாக ஐரோப்பிய குருக்களுக்கும் மக்களுக்கும் பாலமாகச் செயற்பட்டவர்), சங்கிலித்தாம் (செபமாலை, பக்தி முயற்சிகள்,செபங்களை வழிநடாத்தியவர்), மெலிஞ்சியார் (பொருட்கள், கணக்குகளுக்குப் பொறுப்பாக இருந்தவர்), உபதேசியார் (மறைக்கல்வி கற்பித்தவர்) போன்றவர்கள் இவரது காலத்திலும் தொடர்ந்தனர்.

(தொடரும்....)

---

**அர்த்தமுள்ள ஆன்மீகம்**

# நம்பிக்கையோடு பயணிப்போம்...

**அருட்பணி மா.ரேஜிஸ் இராசநாயகம்**

இன்றைய உலகம் தனது நலனுக்காக எதில் எல்லாம் நம்பிக்கை வைக்கமுடியுமோ அதிலெல்லாம் முழு நம்பிக்கை வைத்து நகர்ந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தனக்கென ஒரு சுயநல இலக்கை எதிர்நோக்காக வைத்து, தான் எங்கே போகிறேன் என்று தெளிவில்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறான். எனினும், வாழ்வுப் பயணத்தில் அவன் சந்திப்பதெல்லாம் ஏமாற்றங்களும் தோல்விகளும் கண்ணீரும் துன்பதுயர வேதனைகளுமே.இதற்கான அடிப்படைக் காரணம், தனக்கென இறைவன் வகுத்துள்ள பயணத்தின் பாதையை அறியாமல், அறிந்துகொள்ள முடியாமல், நம்பிக்கையின், உண்மையின், நீதியின் வழியில் நின்று விலகித் தனக்குத் தானே வகுத்த வழியில் நடப்பதாகும்.

தன்னைத் தாங்கிச் சுமந்து கரம் பிடித்து நடக்கவேண்டிய உண்மையின், அன்பின், நீதியின், நம்பிக்கையின் உறைவிடமான இறைவனை, அவரது உடனிருப்பை, பிரசன்னத்தை மறந்து நடப்பதனாலேயே அவர் அருளும் நன்மைத் தனங்களைப் பெறுவதற்கான, அதனை உணர்வதற்கான நம்பிக்கையை இழந்துபோய் பரிதவித்து நிற்கிறான்.

இறைவனை உணர்ந்து, அன்பிலும் நம்பிக்கையிலும் நிலைத்து ஆன்மீக உணர்வுடன் எப்போது வாழத் தொடங்குகிறானோ, அப்போது இறை அருளின் மேன்மையை அவன் உணரத் தொடங்குகிறான். சீராக்கின் ஞான நூல் 2:6 சொல்கிறது " ஆண்டவரில் பற்றுறுதி கொள் அவர் உனக்குத் துணை செய்வார். உன் வழிகளைச் சீர்படுத்து. அவரிடம் நம்பிக்கை கொள்."

நாம் ஆண்டவரிடம் நம்பிக்கை கொள்ளும்போது அனைத்தையும் அவரே பார்த்துக்கொள்வார். பழைய ஏற்பாட்டில் ஆபிரகாம் ஆண்டவர்மீது நம்பிக்கை கொண்டார். அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார்.(தொ.நூ.15:6). அதுமட்டுமன்றி, அவரது வாழ்வின் இறுதிவரை அவருடன் உடனிருந்து அவரை உயர்த்தினார்.

ஆண்டவர் மேல் நம்பிக்கை கொள்வோர்க்கு அவரே என்றும் துணையாவார். ஆனால், நமக்கு அந்த இறைவனிடம் அழியாத, உறுதியான, நிலையான நம்பிக்கை இருக்கிறதா? அந்த நம்பிக்கையை மனிதரிடம் காண முடியாததால்தான் வேதம் சொல்கிறது, "மரத்துக்காவது நம்பிக்கை உண்டு. அது தறிக்கப்பட்டால் மீண்டும் துளிர்க்கும் அதன் குருத்துகள் விடாது துளிர்க்கும்." யோபு 14:7.

தாவீது இறைவனிடம் கொண்ட நம்பிக்கையைப் பாருங்கள். நாற்பது நாட்களாக மக்களை அச்சுறுத்திய கோலியாத்தின் அச்சுறுத்தலுக்கு, அவனது சவாலுக்கு, முழு இஸ்ராயேல் மக்களும் அஞ்சியிருந்த வேளையில், மிகச் சிறியவனான தாவீது கல்லும் கவணும் கொண்டு பெருத்த உரு வமும் பல்வேறு போர் ஆயுதங்களும் கொண்டிருந்த அவனை எதிர்கொள்கிறார். அப்போது கோலியாத் தாவீதைப் பார்த்து, கல்லும் கவணும் கொண்டு வர நான் என்ன நாயா? என்று கேலி செய்கிறான். ஆனால் தாவீதோ நீ ஈட்டியையும் வாளையும் ஆயுதமாகக்கொண்டு வந்திருக்கிறாய். நானோ ஆண்டவர் பெயரால் வந்திருக்கிறேன் என்றார்.(1 சாமு 17:45). அவர் கொண்டிருந்த அசையாத இறை நம்பிக்கை வெறும் ஒரு கல்லால் கோலியாத்தை வீழ்த்தி இஸ்ராயேல் மக்களை மீட்டது.

உரோ 8:35 சொல்கிறது "கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக்கூடியது எது? வேதனையா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்?"

உறுதியான அனைத்தும் அவரே



என்ற நம்பிக்கையோடு பயணிப்பவனுக்கு மேற்சொன்ன எதனாலும் பாதிப்பு இல்லை என்பதை யோபுவின் வரலாற்றில் காண்கிறோம். இறைவன் வழங்கிய அளவிடமுடியாச் சொத்து சுகங்களையும் உறவுகளையும் அலகையின் சோதனையால் முற்றாக இழந்து, மேற்சொன்ன இறை வார்த்தையினுள் அத்தனை துன்பங்களையும் அனுபவித்து, சாவின் விளிம்புவரை சாம்பல் மேட்டில் அமர்ந்து, வேதனைப்பட்டபோதும், நண்பர்களும் சொந்த மனைவியும்கூட இன்னுமா கடவுளை நம்புகிறாய் என்று பழித்தபோது, தான் கொண்டிருந்த இறை நம்பிக்கையில் சற்றும் தளராது நின்ற யோபு, தான் இழந்ததைவிடப் பன்மடங்கு மீளப்பெற்று மகிழ்ந்த கதை நமக்குத் தெரியுமல்லவா?

உண்மையான இறை நம்பிக்கை இறை வல்லமையை ஈர்க்கும் சக்தியுடையது. புதிய ஏற்பாட்டில் பாடுள்ள பெண் இயேசுவின் ஆடையைத் தொட்டாலே குணமடைவேன் என்னும் நம்பிக்கையோடு சனத்திரள் மத்தியிலே அவரது ஆடையைத் தொட்டுக் குணமடைகிறாள். அப்போது இயேசு தன்னை யாரோ தொட்டதையும் வல்லமை தன்னிலிருந்து வெளியேறியதையும் உணர்கிறார். நம்பிக்கை இறை வல்லமையை ஈர்க்க வல்லது என்பது இதிலிருந்து தெரிகிறது.

நம்பிக்கை பாவங்களையும் போக்கவல்லது. இறைமகன் இயேசுவின் வாழ்வில் அவர் செய்த புதுமைகள் அனைத்திற்கும் அடித்தளமாய் இருந்தது அவற்றை அனுபவித்தவர்களின் அசையாத நம்பிக்கையே. புதுமைகளைச் செய்கின்றபோது "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று." என்று கூறுவதிலிருந்து இதை நாம் உணரமுடியும்.

உண்மையான நம்பிக்கை அதனைக் காண்போரையும் இறைவனை நோக்கி நகர்த்தும். தானியேல் இணைப்பிலே பேல் தெய்வமும் அரக்கப் பாம்பும் என்ற பகுதியிலே மேற்படி தெய்வங்களை வணங்க மறுத்த தானியேல், பட்டினி கிடந்த சிங்கக் குகையிலே தள்ளப்படுகிறார்.

ஆண்டவர் தூதர் வழியாக அவருக்கு உணவளிப்பதைப் பார்க்கிறோம். சிங்கக் குகையிலும் ஆண்டவரை நம்பிக்கையோடு போற்றுவதைப் பார்க்கிறோம். ஏழாம் நாளன்று, தானியேலைக் குறித்துக் கவலையுடன் அவரைக் காணச் சென்ற.. (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## காவலன் கலசம்




# என் கேள்விக்கென்ன பதில்!

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

(கருணா, இலண்டன்)
**கே: உங்கள் வீதிகளில் ஒழுங்காக வாகனங்களை செலுத்தும் சாரதிகளைப் பார்ப்பது மிக அரிதாக இருக்கின்றது! வீதி ஒழுங்குகளைப் பேணுகின்றார்கள் இல்லையே! ஏன்?**
**ப:** கருணா, ஒழுங்கை மீறி ஓட்டுவதுதான் இங்கு ஒழுங்காகிப் போனதுதான் இதற்குக் காரணம்! வாகனம் செலுத்துவதில் மட்டுமல்ல மற்றைய செயற்பாடுகளிலும் இது தான் நிலை! அதனால்தான் எங்கள் நாடு இந்நிலை அடைந்திருக்கின்றது!
*(சசி, யாழ்ப்பாணம்)*

*(ஆனந்தன், கிளிநொச்சி)*
**கே: நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமான முட்டாள்களிடமிருந்து அதிகாரத்தை உடனடியாக மீளப் பெற வேண்டுமென கொழும்புப் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறியுள்ளதாகத் தகவல்! ஆண்டகையின் கூற்றுக் குறித்து உங்கள் கருத்தென்ன?**
**ப:** ஆனந்தன், எங்கள் வாயை வைத்துக்கொண்டு சும்மா இருப்போம் என்று விரும்பினாலும் விடுகின்றீர்கள் இல்லையே! ஆண்டகை அவர்கள் இப்போது கண்டுபிடித்திருப்பதை, நாங்கள் எப்பவோ கண்டுபிடித்து விட்டோம்! அதனால்தான் எங்கள் கருத்து அப்போதும் இப்போதும் இனிமேலும் ஒரே மாதிரியாக முறையே இருந்தது, இருக்கின்றது, இருக்கப் போகின்றது ஆனந்தன்!

(றோஸ், மன்னார்)
**கே: அகாலமரணங்கள் இக்காலத்தில் அதிகரித்திருப்பதுபோல் தோன்றுகின்றது! உங்களுக்கு எப்படித் தோன்றுகின்றது?**
**ப:** றோஸ் அக்கா, உங்களுக்குத் தோன்றுகின்ற மாதிரியே எனக்கும் தோன்றுகின்றது! அப்படியென்றால் அதிலே ஓர் ஒத்த கருத்து இருப்பது தெரிகின்றது! நிற்க, மரணம் எங்களைத் தேடி வருகின்றதா அல்லது நாங்கள் மரணத்தைத் தேடிப் போகின்றோமா என்று இன்றைய நிலைமைகளைப் புரிந்து கொள்வது கொஞ்சம் கஸ்ரமாகத்தான் தோன்றுகின்றது! இருப்பினும், பல அகால மரணங்களை நிச்சயமாகத் தவிர்க்கலாம் என்பதுதான் என் கருத்தும் அவதானிப்பும்! ஆனால், வாழ்வதற்கான தெரிவுகள் பல இருக்க, சாவதற்கான தெரிவையல்லவா சிலர் தெரிவுசெய்கின்றார்கள்! மிகவும் வேதனைக்கும் அதேவேளை ஆழ்ந்த விழிப்புணர்வுக்கும் உரிய விடயம் றோஸ்!

(அன்ரன், யாழ்ப்பாணம்)
**கே: எதற்கெடுத்தாலும், எதைச் சொன்னாலும் பொய்மையைச் சேர்த்துச்சொல்வதுபோலவேதெரிகின்றது! அப்படியாயின் உண்மையை எப்படிக் கண்டறிவது?**
**ப:** அன்ரன், சொல்லப்படுகின்ற அல்லது கேள்விப்படுகின்ற எதையும் உடனடியாகவே நம்பிவிடாதீர்கள்! சொல்லப்படுகின்ற அல்லது கேள்விப்படுகின்ற ஒரு விடயத்திற்கு எப்போதும் மூன்று பக்கங்கள் உண்டு எனச் சொல்லப்படுகின்றது! ஒன்று, நீங்கள் அறிந்த பக்கம்! இரண்டு, மற்றவர் கூறும் பக்கம்!! மூன்று, அவ்விடயத்தின் உண்மைப் பக்கம்!!! சொல்வது சரியா அன்ரன்?

*(மேரி, யாழ்ப்பாணம்)*
**கே: 'ஆரியசிங்கவுக்கு அன்புராசா எழுதும் கடிதம்!' என்ற தொடரில் முதலாவது கடிதத்தைக் கடந்த வாரப் பத்திரிகையில் தந்துள்ளீர்கள். அத் தொடர் கடிதம், எந்தக் கட்டத்தில் நிற்கின்றது? அதனைத் தொடர்ந்து தருவீர்களா?**
**ப:** மேரி,'ஆரியசங்கவுக்கு அன்புராசா எழுதும் கடிதம்!' இப்போது 28வது கடிதத்தில் நிற்கின்றது. கடிதம் தொடர்ந்து வர இருப்பதுபோல்தான் தெரிகின்றது. காரணம், காலிமுகத்திடலில் நிற்கும் ஆரியசிங்க இன்னும் வீட்டுக்குப் போகவில்லை என்பதோடு எரிந்துகொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வில்லை! அதனால், கஸ்ர நிலைமைகளுக்குத் தீர்வில்லாமல் பொறுப்பானவர்கள் காலத்தை இழுத்தடிக்கும்போது, நாங்களும் கடிதங்களை எழுதிக் காலத்தைப் போக்கவேண்டியதுதான்! வேறு என்ன தான் செய்வது!

(அருள், யாழ்ப்பாணம்)
**கே: அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாட்டினால் போராட்டங்களும், சண்டைகளும், அடிபாடுகளும் எங்கும் அதிகரித்துக் காணப்படுகின்றது. போகின்ற போக்கில் என்ன நடக்குமோ?**
**ப:** அருள், இருக்கின்ற வரிசைகள் இன்னும் பெருகும்! முரண்பாடுகள் முற்றி மோதல்கள் உருவாகும்! பஞ்சம் ஏற்பட்டுப் பட்டினி நிலவும்! வன்முறை பெருகி வளங்கள் அழியும்! இந்தப் பட்டியல் இப்படியே நீளும்!

*(நாதன், யாழ்ப்பாணம்)*
**கே: நாட்டு மக்களை மேலும் வதைக்காமல் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச உடனடியாகப் பதவி விலக வேண்டுமெனக் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார். அதாவது, தடையாக இராமல் பதவியில் இருந்து உடனடியாக விடைபெறக் கேட்டுக்கொண்டுள்ளார். ஆயர் கேட்டிருப்பது ஆச்சரியமாக இருக்கின்றது. இதுபற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**
**ப:** நாதன், அண்மைக் காலமாகக் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தற்போதைய அரசின் போக்கினைக் கடுமையாக விமர்சித்தும் கண்டித்தும் வருகின்றார் என்றே சொல்லவேண்டும். ஆனால், ஒரு காலத்தில் தற்போதைய ஆட்சியாளர்கள் ஆட்சிக்கு வரப் பச்சைக்கொடி காட்டினார் என்றுதான் சொல்லப்படுகின்றது! ஆனால், இப்போது சிவப்புக்கொடி காட்ட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதால் சிவப்புக்கொடியைக் காட்டியிருக்கின்றார். அதற்கும் செவிசாய்க்காவிட்டால் கறுப்புக் கொடியைக் கையிலெடுப்பார் என்றே நினைக்கின்றேன்.

**அருட்பணி செ. அன்புராசா**

---

# ஈழத்தில் புனித தேவசகாயம்பிள்ளையை அறிமுகம் செய்த நாட்டுக்கூத்து

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

**தேவசகாயம்பிள்ளை கூத்தின் சிறப்பு**

தேவசகாயம்பிள்ளை கூத்தானது நீண்டகாலமாக ஈழத்தில் மேடையேற்றப்படுகின்ற கூத்தாகப் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டு காணப்படுகின்றது. அது இலங்கையின் அயல் நாடான இந்தியாவில் நடந்த உண்மைக் கதையாக இருப்பதனாலும் அவர் தமிழராக இருந்த காரணத்தினாலும் அவரது கதையின் மட்டில்பற்று ஏற்பட்டு மக்கள் அக்கூத்தினை வரவேற்றிருக்கக்கூடும். எனினும் அதனைத் தாண்டிய பல்வேறு சிறப்புகள் அக்கூத்திலே காணப்படுகின்றன.

**இலக்கிய நயம்**

தேவசகாயம்பிள்ளைகூத்தானது ஒரு நாட்டார் இலக்கியம் என்ற எல்லை கடந்து செழுமையான இலக்கியத்திற்குரிய சிறப்பினைக் கொண்டு காணப்படுகின்றது. பாடல்கள் அனைத்தும் மரபுக் கவிதை இலக்கண அமைப்பில் நின்று படைக்கப்பட்டுள்ளன. அதற்குக் காரணம் புலவர் முத்துக்குமாரர் அவர்கள் தமிழ் இலக்கிய இலக்கண ஆற்றல் மிக்க மிகச்சிறந்த புலவராக இருந்துள்ளார். "முத்துக்குமாரன் தமிழ்ப்பாவிற்கு முதற் சிங்கமே" என விஸ்வநாத சாஸ்திரியர்கள் துதிக்கவி கூறியுள்ளமையை இங்கு நினைவு கூர்வது பொருத்தமானதாகும். அவரது புலமைக்கு மாதிரிக்கு ஒன்றாக அரசர் வருகை கூறும் சபை விருத்தத்தினை நோக்கலாம்.

கூவுவாரணங்களோடு கொம்புவாரணம்வரக்
குமிழுகின்ற பீலியோடு விசிறு பீலியேவரத்
தாவு சத்திரங் களோடு தவள சத்திரம் வரத்
தரள வாகு வயமோடு திரளும் வாகுவலையவே
மேவு கின்ற மாதரோடு மளிரு மாத ரேவர
விசய மிஞ்சை சேனையோடு அசைவில் விஞ்சை யோர்வர
நீவு சாமரங்கள் வீச நிகரில் காம ரஞ்சல
நிகரில் பற்பநாத நகர் நிருபன் வந்து தோற்றினான்

அவரது கவிதைச் சிறப்பினை மட்டுமின்றி நாடகச் சிறப்பினையும் இக்கூத்தின பதிப்பாசிரியர் பின்வருமாறு கூறுகின்றார். "கத்தோலிக்கர் அல்லாத ஒருவர் கத்தோலிக்க சமயக் கருத்துக்களையும் வரலாற்றினையும் மிகவும் பொருத்தமாகவும் உண்மைக்குப் பிறழ்ந்து செல்லாமலும் மிக லாவகமாகப் பாடியுள்ளதை ஒரு அசாதாரண திறமை என்று கூற வேண்டும்" என திரு மு.வி.ஆசீர்வாதம் அவர்கள் இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

இக்கூத்தின் சிறப்பினை வர்ணிக்கின்ற அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள்,'புலவர் அவர்கள் சொற்களுடன் விளையாடும் திறனையும் தமிழ் மரபையும் கத்தோலிக்க மறையையும் இணைக்கும்



விதத்தினையும்வியக்காதிருக்க முடியாது என்றும் பாடல்களில் தவழும் எளிமை ஒருபக்கம், எதுகை மோனைகள் மறு பக்கம், இவை காதுக்கு மட்டுமன்றி நாவுக்கும் சுவையூட்டுகின்றன என்றும், சந்தநடை பிழறாது பாமரரும் விளங்கும் வண்ணம் எளிய பாடலில் பழையதொரு வரலாற்றினை எடுத்தியம்பியது முத்துக்குமாரப் புலவரின் புலமைக்கு ஒரு சான்று என்றும் கூறுகின்றார்.

**திருமறை வெளிப்பாடு**

அதுமட்டுமன்றி இந்நா டகத்தின் சிறப்புக்கு மற்று மொரு காரணம் நாடகம் முழுவதும் திருமறை நூலில் காணப்படும் பல்வேறு செய்திகள் விரவியும், புனிதர்கள் பற்றிய குறிப்புக்கள் அங்கும் இங்குமாய் இளையோடியும் கிடக்கின்றன. பழைய ஏற்பாட்டில் உள்ள உலகப் படைப்பு பற்றிய விடயங்கள், மோயீசனின் அழைத்தல், எலியாவுக்கு நடந்த புதுமை, யோனா மீன் வயிற்றில் இருந்தமை, சோதிக்கப்பட்ட யோபு போன்ற திருவிவிலியத்தின் பல வரலாறுடன் தொடர்புபடுத்துகின்றார். புதிய ஏற்பாட்டோடு தொடர்புடைய கன்னி மரியாள் பற்றியும் புனித வளனார் பற்றியும், அவற்றைவிட எஸ்தாக்கியின் சோதனைபற்றியும் எடுத்தியம்பி திருமறை வரலாற்றுடன் தேவசகாயம்பிள்ளையின் மனமாற்றத்தினையும் அவரது சோதனைகளையும் சமய உறுதிப்பாட்டினையும் தொடர்புபடுத்துகின்றார்.

எல்லாவற்றுக்கும் மேலாக இயேசுவின் திருப்பாடுகளின் காட்சிகளை பார்வையாளருக்கு உணர்ச்சி ததும்ப ஆசிரியர் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

"கந்திணைந்து கரஞ்சேரத்தன் கசையினடி பட்டெடமக்காக
சிந்துமிரைத்தத் திருவருளின் செய்கை மறவேன் மறவேனே"
"இகங்குப்புற முள்முடியளழுத்த எடுக்குஞ் சிலுவைக் கனத்துடனே
முகங்குப்புற வீழந்தென்னையாண்ட முதல்வனை நான்மறவேனே"

கதாநாயகனின் வரலாற்றினையும் இயேசுவின் பாடுகளுடன் இணைத்து ஒன்றிக்கச் செய்து நெஞ்சுருகச் செய்யும் சோகச் சுவையால் திளைக்க வைக்கின்றார்.

**காவலூர் யோவான்**

இத்தகைய எழுத்தாற்றலும் கூத்துமரபின் சிறப்பும் இணைந்து மக்கள் மத்தியில் இக்கூத்திற்கு மிகப் பெரிய வரவேற்பினை ஏற்படுத்தின.

**நாடக முரண்**

தேவசகாயம்பிள்ளையானது புனிதரின் உண்மை வரலாற்றி னைக் கொண்டு பாடப் பட்டிருந்தாலும் நாடகக் கலையின் சிறப்புடன் பாடப்பட்டுள்ளது. நாடகத்திற்கு அடிப்படையாக அமைவது முரண் என்று கூறுவார்கள். முரண் இன்றேல் நாடகம் இல்லை என்பதும் ஒருகருத்து. இங்கு நாடக ஆசிரியர் வரலாற்றினை வளர்த்துச் சென்று ஒரு அவலச்சுவையுடன் நாடகத்தினை முடிப்பதற்கு ஏதுவாக பல்வேறு முரண்களைச் சித்திரிக்கின்றார். தேவசகாயம் பிள்ளையின் சொத்துக்கள் அழிந்து துன்பம் ஏற்படுவதுடன் ஆரம்பமாகும் முரண், அவர் கிறிஸ்தவனாவதும் அறிந்த அவ னது மனைவி முரண்படுகின்றார். பின்னர் தெளிவுபெறுகின்றார். தொடர்ந்து அவரது மாமியார் முரண்படுகின்றார். பிராமணர்கள் முரண்படுகின்றனர் அவர்களுடன் தர்க்கம் செய்கின்றார். தொடர்ந்து மந்திரி முரண்படுகின்றார். (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## நம்பிக்கையோடு பயணிப்போம்

(5ம் பக்கத் தொடர்ச்சி...)

மன்னன் எந்தப் பாதிப்புமின்றித் தானியேல் உட்கார்ந்திருப்பதைக் காண்கிறார். உடனே மன்னர் "தானியேலின் கடவுளாகிய ஆண்டவரே! நீர் பெரியவர் உம்மைத் தவிர வேறு கடவுள் இல்லை என்று உரத்த குரலில் கத்தினார்.(தானியேல் பேல்.)

நாம் இதுவரை பார்த்த நம்பிக்கையின் நலன்களை அனுபவித்தவர்கள் நம்மைப் போன்ற சாதாரண மக்களே. அப்படியென்றால் நமது நம்பிக்கை எங்கே? நாம் நம்பிக்கை என்ற போர்வைக்குள் வழிபாடுகள், கோவில்கள், குளங்கள் என்று அலைந்தாலும் நமது எண்ணங்களும் சிந்தனைகளும் உலக ஈர்ப்புக்களில் பற்றுறுதி கொண்டு அவற்றிலேயே முழுமையாக நம்பிக்கை கொண்டு வாழ்வதால், இறையருளை அனுபவிக்கும் தகுதியிலிருந்து தொலை தூரம் சென்றுவிட்டோம். இந்த உண்மையை உணர்ந்தவர்களாய் சிந்தனை, சொல், செயல் அனைத்தையும் அன்னை மரியாவைப்போல், நம் காலத்துப் புனிதர்களைப்போல், இறை நம்பிக்கைக்கு முன்னுரிமை கொடுத்து, இறையருள் பெற்று மகிழ எப்போது முயற்சிக்கப் போகிறோம்? சிந்திப்போம் செயற்படுவோம்.

## ஈழத்தில் தேவசகாயம்பிள்ளையை....

(6ம் பக்கத் தொடர்ச்சி)

**சாத்திரச்சூத்திரச் சடங்கேன் – பேய்கள்**
**தனை வணங்கவும் தொடங்கேன் – உன்றன்**
**கோத்திரம் வந்தாலு மடங்கேன் – என்னைக்**
**கும்பிட்டாலு முன்னுள் மடங்கேன்**

என இந்து சமயக் கொள்கைகளை விமர்சிக்கின்றார். தொடர்ந்து அரசனுக்கு செய்தி அறிவிக்கப்படுகின்றது அரசனது சீற்றம் நாடகத்தின் முரணின் முக்கிய பகுதியாக அமைகின்றது. அரசனால் தேவசகாயம் பிள்ளை அழைக்கப் படுகின்றார் அரசன் இவருடன் தர்க்கிக்கின்றார். துன்புறுத்தலுக்கு கையளிக் கப்படுகின்றார் தொடர்ந்து ஒவ்வொரு மந்திரிகளிடமும் அனுப்பப்படுகின் றார், தேவசகாயன் மதம் மாற மறுகின்றார். மீண்டும மன்னன் அழைத்து மனம் மாறப் பணிக்கின்றார் இவர் மறுக்கின்றார் இறுதியில் அவரைச் சுட்டுக்கொல்லுமாறு கட்டளை இடுகின்றார். எனவேநாடகம் முழுவதும் முரணும் விளைவுமாக வளர்த்துச் செல்லப்படும் சிறப்பினை இந் நாட கம் கொண்டுள்ளது.

**மரபுச் சிறப்பு**

யாழ்ப்பாணக் கத்தோலிக்க தென் மோடிக் கூத்து மரபுக்கென்று ஒரு மரபுச் சிறப்பு உண்டு. காப்பு, தோடயத்துடன் நாடகம் ஆரம்பமாகும், கிறிஸ்தவ கூத்துக்களில் முதலில் தோன்றும் பாத்திரமாக புலசந்தோர் காணப்படுவார் 'புலசந்தோறம்' என்ற புனிதர்களின் வரலாற்றினைக் கூறுகின்ற (அடியார் வரலாறு) நூலில் இருந்துதான் கத்தோலிக்க கூத்துக்களுக்கான மூலக்கதைகள் ஆரம்ப காலங்களில் எடுக்கப்பட்டன. அதனால் அக்கதையைக் கூறுகின்ற பாத்திரமாக 'புலசந்தோர்' பாத்திரம் படைக்கப்பெற்றது என்பர். அது கூத்தின் கதை முழுவதையும் அகவல் பாவிலே முன் சொன்ன பின்னரே கூத்து ஆரம்பிக்கும்.

ஆனால் தேவசகாயம்பிள்ளைபுலசந்தோறத்தில் இருந்து கதையை பெறாது விடினும், புலவரால் அம்மரபு அனுசரிக்கப் பெற்று அக்கதைச் சுருக்கம் இடம்பெறுகின்றது. மரபுக் கூத்துக்களில் உள்முறை மையிலேயே 'சபைவிருத்தம்' 'சபைத்தரு' கூறப்பட்டு பாத்திர அறிமுகம், வரவுகள் இடம்பெறும்.அது இங்கும் முழுமையாகப் பின்பற்றப்பட்டுள்ளது. கட்டியகாரன் வரவு அரச பிரதானிகள் வரவு, தேசவிசாரணை, கதைவளர்ச்சி என மரபுக்கூத்தின் முறைமைகள் பின்பற்றப்படுகின்றன. இக்கூத்து மரபுக்கென உள்ள பாடல் மரபினையேபுலவர் இக்கூத்திலும் பயன் படுத்துகின்றார் பாடல் மெட்டுக் கள் அந்தந்த உணர்வுகளுக்கு ஏற்ப பயன் படுத்தப்படுகின்றன. உதாரணமாக அரசன் கோபங்கொள்ளும் போது பயன்படும் 'கல்வெட்டு சிந்து' இங்கு பயன்படுத்தப்படுவதனைக் கூறலாம். அது மட்டுமன்றி புனிதர்கள் வேதசாட்சிகள் இறப்பதற்கு முன்பாடு கின்ற அவல ஓசைதரும் 'ஓரிசம்' போன்ற மெட்டுகள் இங்கு பயன் படுத்தப்பட்டுள்ளன. கூத்துக்கள் மங்களம், வாழி பாடுதல் என்பதுடனேயே நிறைவுபெறும். இங்கும் இரண்டு விடயங்களும் பின்பற்றப்படுகின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக யாழ்ப்பாணத் தென்மோடிக் கூத்து மரபிலே தேவசகாயம் பிள்ளை கூத்துத்தான் 'தாய்க் கூத்து' என அழைக்கப்பெறுகின்றது. இந்தக் கூத்தில் உள்ள பாடல் மெட்டுக்களைப் பின்பற்றியே பிற்பட்ட காலக் கூத்துக்கள் எழுதப்பெற்றன.

**அளிக்கைச் சிறப்பு**

தேவசகாயம் பிள்ளை கூத்தானது அதன் பிரதிச் சிறப்புக்கு ஏற்ப சிறந்த அளிக்கை முறைமையையும் கொண்டு காணப்படுகின்றது. ஆனால் இலகுவாக அதனை நெறிப்படுத்திவிட முடியாது காரணம் இலக்கிய அறிவும் பாடல்களின் இலக்கண யாப்பும் ஓரளவு அறிந்த அண்ணாவிமார்களே பாடல் சொற்தெளிவுடன் சொல்லிக் கொடுக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். அதனால் தேவசகாயம்பிள்ளை கூத்தினை நெறிப்படுத்த வல்லவரே உண்மையான அண்ணாவியார் என இனங்காணப்பட்டார். காரணம் செழுமையான மரபுக் கவிதைச் சிறப்புடனும் இராகதாளச் சிறப்புடனும் இக்கூத்துக் காணப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி கூத்திலே தேவசகாயம் பிள்ளை பாத்திரமேற்பவர்கள் சிறந்த சாரீர வளங் கொண்டவர்களாகவும் துக்கப் பாடல்களை சிறப்பாகப் பாட வல்லவர்களாகவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. தேவசகாயம் பிள்ளை பாத்திரத்தினை ஏற்றவர்கள் கத்தோலிக்க கூத்துமரபிலே சிறந்த கூத்தர்களாக போற்றப்பட்டார்கள். அதனால் தான் அண்ணாவியார் பக்கிரி சின்னத்துரை, அண்ணாவியார் குணசிங்கம், அண்ணாவியார் சாமிநாதர், அண்ணாவியார் வின்சன் டிபோல் அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜா.. .போன்றவர்கள் மிகச்சிறந்த கூத்துக் கலைஞர்களாக இன்றும் பாராட்டப் பெறுகின்றார்கள். இக் கூத்துப் பற்றி அமரர் பூந்தான் யோசேப்பு அவர்கள்கூறுகின்ற பின்வரும் கூற்று இதன் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது. "தேவ சகாயம் பிள்ளை நாட்டுக்கூத்து இக்கால நாட்டுக்கூத்துக் கலைஞர்களுக்கு ஓர் ஆசிரியன் போன்றதாகும். தேவசகாயம்பிள்ளை நாட்டுக்கூத்தில் உள்ள பாடல்களின் மெட்டு இராக தாளம் என்பவற்றை அனுசரித்தே பிற்கால நாட்டுக் கூத்துக்கள் பாடப்பெற்றன."

**முடிவுரை**

முதல் தமிழ்ப் புனிதர் என நாம் பெருமை கொள்ளும் தேவசகாயம்பிள்ளையை ஈழத்தவருக்கு அறிமுகம் செய்து அவரது விசுவாசத்தினையும் வேதசாட்சி மரணத்தினையும் எமக்கு முன்மாதிரியாக எடுத்துக்காட்டிய கூத்து மரபானது, புனிதர்களையும் வேதசாட்சிகளையும் அறிமுகம் செய்து கத்தோலிக்க விசுவாசத்தினை உயிர்ப்புடையதாக இம் மண்ணில் வைத்திருந்தது மட்டுமன்றி எமது மக்களுக்கு அழகியல் அனுபவத்தைத் தந்தும் இலக்கிய ஆர்வத்தினை ஏற்படுத்தியும், திறமைகளுக்கு களமமைத்தும், சமூகவியல் தொகுதியாகவும் திகழ்ந்த தொடர்புக் காத்திரம் மிக்க மரபு என்பதனை நாம் உணரவேண்டும். இன்று இம்மரபு மிகவும் நலிந்து காணப்படுவது வேதனைக்குரியது. இதனைப் பேணுவதும், வளர்ப்பதும், பாதுகாப்பதும் எமது சமூகத்தினதும் திருச்சபையினதும் தலையாய கடமையாகும்.

## விண்ணக வாழ்வின் 2ம் வருட நினைவலைகள்

மலர்வு 04 . 07 . 1972

உதிர்வு 20 . 07 . 2020



AD / 52

அமரர்

### சவரிமுத்து கிறிஸ்ரியன் அலெக்சியூஸ்

மெய்வருத்தம் எதுவுமின்றி
மகிழ்ந்திருந்த உம் உயிர்மூச்சு
கண் இமைக்கும்
நொடிப்பொழுதில்
காணாமல் போனதுவே....

உம் உடல் வருத்தி
எம் உயிர் காத்தீர்
உம் உயிர் காக்க

உம் முகம் காண
எம்மால் முடியாமல் போனதுவே...

ஐபத்து அகவையை எட்டுகையில்
ஆண்டு இரண்டு ஆனதுவே
ஆண்டவன் சந்நிதானம் நீர் சென்று
ஆறாது எம் துயரம்
ஆற்றிட முயல்கின்றோம்
அவரின் துணையோடு...

சென் யூட், இளவாலை

குடும்பத்தினர்

## 12 ஆம் ஆண்டு நினைவு

மலர்வு 21 . 10 . 1935

உதிர்வு 16 . 07 . 2010



அமரர்

### பிரான்சிஸ் கிறிஸ்ரி வேதநாயகம்

மாண்டவர் மீண்டதில்லை
என்ற போதும் - மாற்றமுடியவில்லை
உமக்கான எம் தேடலை- இப்
பன்னிரெண்டு வருடங்கள் நிறைவிலும்

AD / 52

7, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

இவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## நெஞ்சை விட்டகலா நினைவலைகள்

### 52 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி

**மிரியம் சாமினி சில்வெஸ்ரர்**

மண்ணில் : 06.10.1962
விண்ணில் : 26.06.1970

### 3ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**மேரி இமாக்குலெட் சில்வெஸ்ரர்**

பிறப்பு : 18.09.1938
இறப்பு : 10.06.2022

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய். பாசத்தின் உறைவிடமாய். நற்குணங்களின் சிகரமாய். இறைபக்தியில் சிறந்து விளங்கி எம்மை விசுவாச நல்வாழ்வில் வாழ வழி வகுத்த எம் தாயும் சகோதரியுமான உங்கள் வாழ்வு விண்ணில் நித்திய வாழ்வாக வாழ இறைவன் பா தம் பணிந்து வேண்டி நிற்கின்றோம்.

AD - 53

சுருவில்

ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

# யாழ். இராணுவக் கட்டளைத் தளபதி யாழ் ஆயருடன் சந்திப்பு



யாழ் மாவட்டத்தின் புதிய இராணுவக் கட்டளைத் தளபதியாகப் பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் சந்தன விஜயசுந்தர அவர்கள் கடந்த 04ஆம் திகதி யாழ் ஆயர் இல்லத்திற்கு விஜயம் மேற்கொண்டு ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலை, பொருளாதார நெருக்கடியால் மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள், எரிபொருட்களைப் பெறுவதில் மக்கள் எதிர்கொள்ளும் பாரிய சிக்கல்கள் மற்றும் மக்களின் மீள்குடியேற்றம் போன்ற விடயங்கள் இதில் கலந்துரையாடப்பட்டன. இச்சந்திப்பில் ஒட்டகப்புலம், வசாவிளான், தோலகட்டிச் சந்தி வரை விடுவித்து மக்கள் மீள்குடியேற நடவடிக்கை எடுக்குமாறும் ஆயர் யாழ் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# நவாலிக் குண்டுத்தாக்குதலின் நினைவு நாள்





நவாலி புனித பேதுருவானவர் ஆலயத்தின்மீது இலங்கை அரச விமானப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதக் குண்டுத் தாக்குதலில் பலியானவர்களின் 27ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு புனித பேதுருவானவர் ஆலயத்தில் கடந்த 09ஆம் திகதி உணர்வுபூர்வமான முறையில் அனுஸ்டிக்கப்பட்டது.

பங்குத்தந்தை அருட்திரு அன்ரனிதாஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நினைவுத்திருப்பலியைத் தொடர்ந்து அங்கு அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபியில் மக்களினால் அஞ்சலி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

# கச்சதீவுத் திருத்தலத்திற்குக் குடிநீர் வசதி



கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்திற்கு வருகைதரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு அங்கு அமைக்கப்பட்டு வந்த குடிநீர் தாங்கிக்கான வேலைகள் நிறைவடைந்த நிலையில் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது.

Tokoyo Cement நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.ஞானம் அவர்களின் முழுமையான நிதிப்பங்களிப்பிலும் கடற்படையின் அனுசரணையுடனும் நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கி மற்றும் நீரிணைப்புத் தொகுதி ஆகியன இத்தாலி நாட்டில் பணியாற்றி வரும் யாழ். மறைமாவட்டத்தை சேர்ந்த அருட்திரு. மதி இளம்பருதி அடிகளினால் ஆசீர்வதித்துத் திறந்துவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு வசந்தன் அவர்களும் கடற்படை வட பிராந்தியக் கட்டளைத் தளபதி அவர்களும் கலந்துகொண்டனர்.

# வெள்ளிவிழாக் காணும் சாவகச்சேரி வின்சென் டி போல் சபை



சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலய வின்சென் டி போல் சபையின் 25வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாவற்குழி புனித அற்புத அன்னை ஆலய புனித வின்சென் டி போல் சபையினருடன் இணைந்து முன்னெடுத்த வருடாந்த சிறப்புப் பொதுக்கூட்டம் கடந்த 19ஆம் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்திரு ஞானறூபன் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக சாவகச்சேரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. தளிர்ராஜ் அவர்களும் சிறப்பு விருந்தினராக வின்சென் டி போல் சபையின் மத்திய சபை ஆன்ம ஆலோசகர் அருட்திரு நேசநாயகம் அடிகளும் கலந்து சிறப்பித்தனர்.

# குளமங்காலில் பீடப்பணியாளர்கள் ஒன்று கூடல்



குளமங்கால் பங்கின் நான்கு ஆலய பீடப்பணியாளர்களுக்கான ஒன்று கூடலும் விளையாட்டு நிகழ்வுகளும் கடந்த 06.07.2022 அன்று குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் இளையோர்களின் ஒத்துழைப்புடன் பங்குத்தந்தை அருட்பணி ச.பாஸ்கரன் அடிகள் தலைமையில் நடைபெற்றது. இதில் 60 பீடப்பணியாளர்கள் பங்கெடுத்திருந்தனர்.

# நல்லூரில் திருப்பாலத்துவ சின்னம் சூட்டும் விழா



நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தைச்சேர்ந்த 39 சிறார்களுக்கு திருப்பாலத்துவ சபையின் நிரந்தர அங்கத்துவம் வழங்கிச் சின்னம் சூட்டப்பட்டது.

# குருநகரில் திருஇருதய பக்திச் சபையின் விழா



யாழ். குருநகர் புனித யாகப்பர் ஆலய திருஇருதய பக்திச்சபையினரின் திருவிழா கடந்த 26ஆம் திகதி புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. திருவிழாத் திருப்பலியை அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு சந்திரதாஸ் அடிகள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். திருஇருதயப் பெருவிழாவின் முன்னாயத்தமாக திரிதின ஆராதனைகளும் இடம்பெற்றிருந்தன.

# பெரியவிளானில் பீடப்பணியாளர்கள் தினம்



இளவாலை மறைக்கோட்டத்திலுள்ள பெரியவிளான் புனித அந்தோனியார் ஆலய பீடப்பணியாளர்களால் முன்னெடுக்கப்பட்ட அம் மன்றத்தின் பாதுகாவலர் திருவிழா கடந்த 26ஆம் திகதி நடைபெற்றது.

பாதுகாவலரான புனித ஞானப்பிரகாசியார் திருநாள் திருப்பலியை பங்குத்தந்தை அருட்திரு அன்ரன் மேரியன் அடிகள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்ததுடன் பீடப்பணியாளர்கள் மற்றும் பங்கு மக்கள் திருப்பலியில் இணைந்து செபித்தார்கள்.

# பளையில் திருப்பாலத்துவ சின்னம் சூட்டும் விழா



பளைப்பங்கைச் சேர்ந்த 64 சிறார்களுக்குத் திருப்பாலத்துவ சபையின் நிரந்தர அங்கத்துவம் வழங்கப்பட்டுச் சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்பணி எஸ். ஏ. ஜோர்ஜ் அடிகளின் நெறிப்படுத்தலில், திருப்பாலத்துவ சபையின் மறைமாவட்ட இயக்குநர் எஸ். ஏ. றொஷான் அடிகளார் திருப்பலி ஒப்புக்கொடுத்து சின்னம் சூட்டினார்.

# பரந்தனில் முதல்நன்மை



பரந்தன் அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த 6 சிறுவர் சிறுமியர்களுக்கு முதல்நன்மை திருவருட்சாதனம் கடந்த வாரம் வழங்கப்பட்டது.

முதல்நன்மைத் திருப்பலியை பங்குத்தந்தை அருட்பணி R.H. சகாயநாயகம் அடிகளார் நிறைவேற்றினார்

# ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் முதல்நன்மை



யாழ். நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு கடந்த 03ஆம் திகதி நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்திரு எயின்சிலி றொஷான் அடிகளின் நெறிப்படுத்தலில் அருட்பணி லெபோண் சுதன் அடிகளாரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட அருட்சாதனத் திருப்பலியில் 09 சிறார்கள் முதல்நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ம் ஆண்டு யூலை மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.